**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.333/2025**

2026–ம் ஆண்டு **ஏப்ரல் மாதம் 08–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமலா | வா.சா | 1 |
| த/க/பெயர் | மணிவண்ணன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | சேலம் | வட்டம் | சேலம் |
| வயது | 58 | நாள் | 08.04.2026 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 02.01.2012 தேதியிட்ட வாதியின் தகப்பனார் ராதாகிருஷ்ணன் பெயரிலுள்ள கிரய ஆவணம் உண்மை நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 29.03.2022 தேதியிட்ட நாமக்கல் மகளிர் நீதிமன்ற அ.வ.எண்.173/2012 மற்றும் அ.வ.எண்.162/2014 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட பொதுவான தீர்ப்புரை உண்மை நகல் **வா.த.சா.ஆ.2 ஆகவும்,**

3) 29.03.2022 தேதியிட்ட நாமக்கல் விரைவு மகளிர் நீதிமன்ற அ.வ.எண். 173/2012 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) 05.03.2025 தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.354 மற்றும் 355/2022 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட பொதுவான தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) 05.03.2022 தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.354/2022 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) 05.03.2025 தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.355/2022 வழக்கில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.6 ஆகவும்,**

7) 09.04.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.7 ஆகவும்,**

8) 12.04.2025 தேதியிட்ட ஒப்புதல் அட்டை அசல் **வா.த.சா.ஆ.8 ஆகவும்,**

ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |